# சங்ககால மக்களின் வாழ்வியல் முறை

***முனைவர் வ. மாலிக்***
உதவிப்பேராசிரியர், அரசு உதவிப் பெறா பாடங்கள்
சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, ரஹ்மத்நகர், திருநெல்வேலி

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6441

*சங்ககால மக்களின் வாழ்வியல் முறையை அகம், புறம் என்று பிரிக்கலாம். அகத்திணை காதலும், புறத்திணை வீரத்திற்கும் சொல்லப்படுகிறது. சங்க இலக்கியத்தில் பெரும்பாலும் அகத்திணையே அதிக அளவு இடம் பெறுகிறது. திணை என்பதற்கு நிலம், இடம், வீடு, குலம், ஒழுக்கம் எனப் பல பொருள்கள் உண்டென்று சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் பேரகராதி குறிக்கின்றது. முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்று மூன்று பிரிவாக, வாழ்வியலை பிரித்து வாழ்ந்தார்கள். முதற்பொருளில் ஐவகை நிலைம் பற்றியும், அவற்றின் பொழுது பற்றியும் கருப்பொருளில் ஐவகை நிலம் பற்றியும், அவற்றின் பொழுது பற்றியும், கருப்பொருளில் நிலம் சார்ந்து வாழும் உயிர்கள் பற்றியும், உரிப்பொருளில் இவ்வுயிர்களில் பகுத்தறிவு பெற்ற மனிதர்களின் அக ஒழுக்கப்பாடுகளின் உரிப்பொருளிலும் கூறப்பட்டுள்ளது.*

*சங்க இலக்கியம் சங்க கால மக்களின் வாழ்வியல் முறைப் பற்றி நாம் தெரிந்து கொள்ளவும் சான்றாகவும் எட்டுத் தொகையும் பத்துப் பாட்டுமே உள்ளது. இந்த எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் தனிமனிதப் படைப்பானது பலர் பல காலங்களில் பல பொருள் பற்றிப் பாடியுள்ளனர்.*

*திருமணம் சங்ககால மக்களின் வாழ்வியல் முறையை குடும்பத்தில் இருந்து தொடங்கலாம், குடும்ப உறவு திருமணத்தை மையப்படுத்தி உருவாகிறது. இந்த திருமண வாழ்வு இரண்டு வகையாக உள்ளது.*

1. *களவு*
2. *கற்பு வாழ்க்கை*

*களவு வாழ்க்கை திருமணத்திற்கு முந்தைய வாழ்க்கை களவு வாழ்க்கையாகும். காதல் கொண்ட தலைவன் தலைவியின் கற்பு வாழ்க்கை வாழ தோழி தாய்க்கு எடுத்துரைப்பால் இது அறத்தொடு நிற்றல் எனப்படும். இக்களவு வாழ்க்கை பெரியோர்களால் அங்கீகரிக்கப்பட்ட சூழலில் அது திருமணத்தில் முடிந்து கற்பு வாழ்க்கைக்கு இடம் பெயர்கிறது. அங்கீகரிக்கப்படாத சூழலில் தலைவனும், தலைவியும் ஊரை விட்டு அகன்று மனம் செய்து கொள்கின்றனர். இது உடன்போக்கு திருமணம் எனப்படுகிறது.*

### கற்பு வாழ்க்கை

களவு கற்பாக மலர்ந்து வாழ்ந்து ஒருவகை வாழ்க்கை, பெற்றோர் பார்த்து திருமணம் செய்யும் கற்பு வாழ்க்கையும் வழக்கில் இருந்தது.

### தொழில்கள்

மக்கள் தாங்கள் வாழும் இடத்திற்கு ஏற்ப வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்பவும் தொழில்கள் செய்தனர். வாணிகம், உழவு, நெசவு, தச்சு, பொன் அணி வேலைகள், இரும்பு வேலைகள், வீடுகட்டுமானப் பணிகள், கப்பல் படகு கட்டுதல், வேட்டையாடுதல், ஆநிரை மேய்தல், மீன் பிடித்தல், வேட்டையாடுதல், ஆகியன குறிப்பிடத்தக்கவையாகும். அடிப்படை தேவைகள்

### உணவு

பலவகை உணவுகள் தயாரிக்கப்பட்டன. தினையரிசியும் பாலும் கலந்து பால் சோறு, அவரைப் பருப்பும் அரிசியும் கலந்த பருப்புச் சோறு, இறைச்சியும் அரிசியும் கலந்த "ஊன் துவை அரிசில்" புளியும் மோரும் மூங்கில் அரிசியோடு கலந்து ஆக்கப்பட்ட "புளியங்கூழ்" ஆகியன சங்ககால உணவு வகைகளுள் குறிப்பிடத்தக்கவை. அரிசி க்களி, அரிசிக்கூழ், அரிசிசோறு ஊன் உணவும் கள்ளும் இனவேறுபாடின்றி அனைவரும் உண்டனர்.

கறிகூட்டு வகைகளில் அசைவ உணவே பெருவழக்காக இருந்தது. முட்டையுடன் கூடிய உடும்புப் பொரியல், பன்றியின் கொழுப்புக்கறி, செம்மறியாட்டின் தொடைக்கறி, சுட்ட மீன்வறுவல், மிளகுப் பொடியும் கறிவேப்ப இலையும் கலந்து வேகவிட்ட ஊறுகாய் செய்யும் வழக்கம் பெரும்பாணாற்றுப்படை (306-310) குறிப்பிடுகிறது. உப்புகண்டம், கறியை வேகவைத்தும், சுட்டு உண்ணும் பழக்கம் வழக்கில் இருந்தது. ஐங்கறுநூற்றில் 264 ஆம் பாடலில் காளான் (Carissa Carandas) செடி பற்றிய குறிப்பு உள்ளது. உளுந்து (211) பயறு (47) செருந்தி (112, 141, 182) போன்ற செடிகள் பற்றியும் ஐங்குறுநூறு பேசுகிறது.

### ஆடை அணிகலன்கள்

சங்கத்தமிழர்கள் விதவிதமான ஆடைகளை அணிந்திருந்தனர் என்பதை சங்கபாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன. பருத்தி நூல் பற்றிய செய்தியை அகநானூறு (133) பாடல் கூறுகிறது. பெண் மகளிர் நூல் நூற்ற செய்தியை (புறம் 326) கூறுகிறது.

மெலிதான துணிகளை பயன்படுத்தியுள்ளனர். மிக நுட்பமான வேலைபாடுடைய ஆடையினை அணிந்திருந்தனர் என்பதை பொருநராற்றுப்படை (83) கூறுகிறது.

"நோக்கு நுழைகல்லா நுண்மைய புக்கனிந்து அரவுரியன்ன அறுவை நல்கி" மெல்லிய, விலையுயர்ந்த கலைவேலைப்பாடு மிக்க ஆடைகளை ஆண்கள் அணிந்திருந்தனர். குறிப்பாக செல்வந்தர்கள் அணிந்தனர், பெண்கள் செம்மைநிற ஆடை, வெள்ளை நிற ஆடை, பட்டாடை, பருத்தியாடையும் அணிந்திருந்தனர் என்ற குறிப்பு பட்டினப்பாலையில் காணப்படுகிறது. போர்க்களம் செல்லும் வீரர்கள் மார்பில் கச்சை கட்டிச் செல்வர். பலவகையான அணிகலன் பற்றிய குறிப்புகளும் காணப்படுகிறது. கழுத்தில் முத்து மாலையும் கையில் வளைகளும் தலையில் புவின் கண்ணியும் ஆண், பெண் ஆகிய இருபாலரும் அணிவது வழக்கமாக இருந்தது. இருப்பிடம்

சங்கத்தமிழர் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்திணைகளை தங்கள் இருப்பிடமாக கொண்டு வாழ்ந்து வந்தார்கள்.

### குறிஞ்சி

மலை சார்ந்த பகுதி குறிஞ்சி எனப்பட்டது அங்கு வாழ்ந்த மக்கள் குறவர்கள் எனப்பட்டனர். தொடக்க நிலையில் நிலையான குடியிருப்பு அமையவில்லை எனலாம்.

### முல்லை

காடு சார்ந்த பகுதி முல்லை எனப்பட்டது. அங்கு வாழ்ந்த மக்கள் ஆயர் எனப்பட்டனர். காட்டின் பசுமை வளம் பசுக்களை வளர்க்குமாறு அவர்களைத் துண்டியது நிலையான குடியிருப்புக்கு அச்சூழல் வழிவகுத்தது. மக்களின் சமுதாய வாழ்க்கை முல்லையில்தான் முதலில் மலர்ந்தது எனலாம்.

### மருதம்

வயல்சார்ந்த பகுதி மருதம் எனப்பட்டது. அங்கு வாழ்ந்தவர்கள் ஊரார் எனப்பட்டனர். இந்நிலப்பகுதி பெரிதும் நீர்வளம் மிக்க ஆறுகளையும், குளம் குட்டைகளையும் கொண்டதாக இருந்தது. இவ்வசதியால் மக்கள் குடியேற்றம் அங்கு அதிகமாக இருந்தது. பழம்பெரும் நாகரிக நாடுகள் எல்லாம் “ஆற்றங்கரை நாகரிகங்களாக” விளங்கியமைக்கு வயல் வளம் மிக்க மருத நில இயற்கை சூழல் ஒரு காரணம்.

### நெய்தல்

கடல் சார்ந்த பகுதி நெய்தல் எனப்பட்டது. அங்கு வாழ்ந்தவர்கள் பரதவர்கள் எனப்பட்டனர். கடல் தந்த மீன் அவர்களுக்கு உணவாக அமைந்தது. பெருநகர் அமைப்புக்கள் கடற்கரைப் பகுதியில் இருந்தது. கால் கொண்டன வஞ்சி, கொற்கை முசிறி, காவிரிப்பும்பட்டினம் ஆகிய நகரங்கள் காணப்பட்டனர். பரதவர்கள் அயல்நாட்டுடன் வாணிப தொடர்பில் இருந்தனர்.

### பாலை

மணல் சார்ந்த பகுதி பாலை எனப்பட்டது. முல்லையும் குறிஞ்சியும் வறண்டு போனால் அவை பாலை எனப்பட்டது. இங்கு வாழ்ந்தவர்கள் எயினர் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் தொழில் வழிப்பறிச் செய்தல், ஆளற்ற அப்பாவை நிலை அமைப்புக் கொள்கையிட அவர்களுக்குத் துணை நின்றது.

ஒரு நாட்டின் வளத்திற்கும் வறட்சிக்கும் அதன் இயற்கையமைப்பே வித்திடுகிறது. இயற்கை வளத்திற்கேற்பவே மக்களின் வாழ்க்கை வளமும் அமைகிறது.

### புறம்

அகம் அல்லாத மற்ற எல்லாவற்றையும் புறத்தில் அடங்கினர். சங்க மக்கள் இதில் மிகச்சிறப்பாக பேசப்படுவது போர் முறையாகும். போர்முறைகளை அறியத் தொல்காப்பியம், புறத்திணையில், புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய நூல்கள் பெரிதும் துணை நிற்கின்றன.

இவ்வாறாக அகம், புறம் வாயிலாக சங்க மக்களின் வாழ்வியல் முறையை நம்மால் அறிய முடிகிறது. மனிதன் காலம் காலமாக பின்பற்றி வரும் பழக்கவழக்கங்களே, நாளடைவில் சிறப்பு பெற்று பண்பாடுகளாக வளம் பெறுகின்றன. இந்த பண்பாட்டின் தொடக்கம் சங்ககால மக்களின் வாழ்வியல் முறையாகும்.

### பயன்படுத்தப்பட்ட நூல்கள்

1. தமிழக வரலாறும் - தமிழர் பண்பாடும் டாக்டர் ஆ.இராமகிருட்டிணன் சர்வோதய இலக்கியப் பண்ணை மதுரை
2. சங்க இலக்கியமும் சமூகக் கருத்தியலும் (தொகுதி-1) தமிழ்த்துறை தூய சவேரியார் கல்லூரி பாளையங்கோட்டை